# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

## முன்னிலை: திரு. செ.தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்

## மேல்முறையீட்டு மனு எண் 94 / 2021

திருமதி ப.சந்திரா,
31, காமராஜர் தெரு, பெண்ணாடம்,
திட்டக்குடி தாலுக்கா,
கடலூர் மாவட்டம் – 606 105. ………மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு.ப.அருள்செல்வம்)

எதிர்

1. செயற்பொறியாளர்/இ.கா./அரியலூர்,
பெரம்பலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண் 56, ராஜாஜி நகர், கல்லூரி ரோடு, அரியலூர் – 621 713.

2. உதவி செயற்பொறியாளர்/ இ.கா./கிராமியம்/செந்துறை,
பெரம்பலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11KV துணை மின் வளாகம்,
செந்துறை அஞ்சல் & தாலுக்கா,
செந்துறை – 621 714.

3. உதவி பொறியாளர்/ மாத்தூர்,
பெரம்பலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
4/14 & 4/12, மெயின் ரோடு, அசவீரன் குடுக்காடு,
R.S. மாத்தூர் – 621 714.

...... எதிர்மனுதாரர்கள்
(திரு. P. ஐயனார், செயற்பொறியாளர்/இ.கா./அரியலூர்
திரு R. பொன்சங்கர், உதவி செயற்பொறியாளர்/ இ.கா./கிராமியம்/செந்துறை
திரு. K. கார்த்திக், உதவி பொறியாளர்/ மாத்தூர்)

**மனு பெறப்பட்ட நாள்: 17-12-2021**

**கேட்புரை நாள்: 16-02-2022**

**ஆணை நாள்: 05-04-2022**

17.12.2021 அன்று பெறப்பட்ட திருமதி. சந்திரா, 31, காமராஜர் தெரு, பெண்ணாடம், திட்டக்குடி தாலுக்கா, கடலூர் மாவட்டம் – 606 105 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 94/2021 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீப்பாளரின் கேட்புரை 16.02.2022 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**ஆணை**

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

மேல்முறையீட்டாளர் திருமதி. சந்திரா அவர்கள் கிரையம் பெற்ற வீட்டில் அமைந்துள்ள இரண்டு மின் இணைப்புகளையும் தன் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யுமாறு விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 கிரையம் பெற்ற வீட்டில் அமைந்துள்ள இரண்டு மின் இணைப்பு எண் 322-003-043 மற்றும் 322-003-633 தன் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யுமாறு இணையதளம் மூலம் விண்ணப்பித்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.2 பின்னர் ரூ.708/- கட்டண தொகை செலுத்தி பெயர்மாற்றத்திற்கான ஆவணங்களை உதவி பொறியாளர்/R.S.மாத்தூர் அவர்களிடம் நேரில் சமர்ப்பிக்கப்பட்டதாகவும், ஆனால் 21 நாட்கள் கடந்தும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால் மேல்முறையீட்டாளர் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 25.08.2021 அன்று அணுகியுள்ளார்.

2.3 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம் 20.10.2021 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 <u>மன்றத்தின் தீர்வு:</u>

பெரம்பலூர் மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 20.10.2021 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"<u>தீர்ப்பு</u>:*

*மனுதாரர் திருமதி. சந்திரா, காமராஜ் தெரு, கடலூர் மாவட்டம், திட்டக்குடி அஞ்சல், பெண்ணாடம் அவர்கள் திருமதி. தைலம்மை ஆச்சி மற்றும் பாலசுப்ரமணியன் ஆகியோர் பெயரிலுள்ள வீட்டின் மின் இணைப்புகள் முறையே 322-003-043 மற்றும் 322-003-633-ஐ தனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்து தரக் கோரி புகார் மனு அளித்திருந்தார்.*

*மேலும் பெயர் மாற்றம் செய்வதற்கு அளித்திட்ட விண்ணப்பங்களில் இணைக்கப்பட்ட ஆவணங்களில் புல எண் மற்றும் கதவிலக்கம் வெவ்வேறாக இருந்ததால் பெயர் மாற்றம் செய்ய இயலவில்லை எனவும் உரிய வருவாய் ஆவணங்களை மனுதாரர் சமர்பிக்கும் பட்சத்தில் வாரிய விதிமுறைக்கு உட்பட்டு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வாரிய தரப்பு சாட்சிகளான செயற்பொறியாளர்/ இகா/ அரியலூர் மற்றும் உதவிசெயற்பொறியாளர் /இகா /செந்துறை ஆகியோர் தெரிவித்துள்ளதன் அடிப்படையில் பெயர் மாற்றம் செய்வதற்கு உரிய ஆவணங்களை அளித்திட மனுதாரருக்கும், அவ்வாறு அளிக்கும் பட்சத்தில் வாரிய விதிமுறைக்கு உட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என செயற்பொறியாளர்/இகா/ அரியலூர் அவர்களுக்கும் இம்மன்றம் தீர்ப்பளித்து உத்தரவிடுகிறது."*

4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 16.02.2022 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு.ப.அருள்செல்வம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு. P. ஐயனார், செயற்பொறியாளர்/இ.கா./அரியலூர், திரு R. பொன்சங்கர், உதவி செயற்பொறியாளர்/ இ.கா./கிராமியம்/செந்துறை மற்றும் திரு. K. கார்த்திக், உதவி பொறியாளர்/ மாத்தூர், பெரம்பலூர் மின்பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## 5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் திருமதி. P. சந்திரா அவர்கள் சொத்தை திரு.ராஜகோபால் அவர்களிடம் இருந்து 27–ந் தேதி ஜனவரி மாதம் 2016 ஆம் ஆண்டு கிரையம் பெற்று சார் பதிவாளர் அலுவலகம், செந்துறையில் ஆவண எண்: 151/2016 ஆக பதிவாகியுள்ளதாகவும், மேற்படி சொத்தில் பாகம் கோரி திரு. பாலசுப்பிரமணியன் (ii) திரு. முருகேசன் (iii) திருமதி.கஸ்தூரி ஆகியோர் இணைந்து கூடுதல் மாவட்ட நீதிமன்றம், அரியலூரில் வழக்கு தொடரப்பட்டு 21.11.2016 நாளிட்ட தேதியில் வழக்கு எண்.24/2016 ஆக பதிவானதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 வழக்கின் விசாரணை முடிந்து 21.03.2019 ஆம் தேதியன்று தீர்ப்புரை வழங்கப்பட்டதாகவும், தீர்ப்புரை மேல்முறையீட்டாளர் திருமதி.P.சந்திரா அவர்களுக்கு சாதகமாகவே அமைந்துள்ளதாகவும், அந்த தீர்ப்பின் சில பத்திகள் கீழ்க்கண்டவாறு

> *<u>"கூடுதல் மாவட்ட நீதிமன்றம், அரியலூர் தீர்ப்பாணை விவரம்</u>*
>
> *முடிவாக வழக்குரை சொத்துக்களான 1 மற்றும் 2–வது அயிட்ட சொத்துக்கள் ஏற்கனவே பாகம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் 1–ம் பிரதிவாதி, 2–ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்துள்ளார் என்று காணும் நிலையில் வாதிகளுக்கு வழக்கில் கோரிய பாகம் கிடைக்கதக்கதல்ல என்று முடிவு செய்யப்படுகிறது.*
>
> *2–ம் பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது."*

5.3 மேற்கண்ட தீர்ப்பாணையை கூர்ந்து படிக்கும் பொழுது வழக்குரை சொத்துக்கள் ஏற்கனவே பாகம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் திரு. ராஜகோபால் (பிரதிவாதி–1) அவர்கள் திருமதி. சந்திரா (பிரதிவாதி–2) அவர்களுக்கு கிரையம் செய்துள்ளார் என்று

காணும் நிலையில் திரு.பாலசுப்பிரமணியன் (வாதி–1) திரு.முருகேசன் (வாதி–2) திருமதி.கஸ்தூரி (வாதி–3) ஆகியோர்களுக்கு வழக்கில் கோரிய பாகம் கிடைக்கத்தக்கதல்ல என்று முடிவு செய்யப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 மேல்முறையீட்டாளர் கிரையம் பெற்ற வீட்டில் அமைந்துள்ள திருமதி தைலம்மை ஆச்சி மற்றும் திரு. பாலசுப்பிரமணியன் ஆகியோர் பெயரில் உள்ள வீட்டு மின் இணைப்புகளை 322–003–043 மற்றும் 322–003–633 பெயர் மாற்றம் செய்பவரை எதிர்க்கவோ, தடுக்கவோ யாருக்கும் உரிமையில்லை என்பதை தெளிவுபடுத்தவே நீதிமன்ற தீர்ப்பாணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், மேல்முறையீட்டாளர் தான் கிரையம் பெற்ற வீட்டில் அமைந்துள்ள திருமதி.தைலம்மை ஆச்சி (322–003–043) மற்றும் திரு.பாலசுப்பிரமணியன் (322–003–633) ஆகியோர் பெயரில் உள்ள வீட்டு மின் இணைப்புகளை தனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய 03.08.2021 ஆம் தேதியன்று ஆன்லைன் மூலம் விண்ணப்பித்திருந்தார். அன்றே கட்டண தொகை ரூ.708/– இணையதளம் மூலம் செலுத்தாகிவிட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 இணையதளம் மூலம் விண்ணப்பம் செய்த பின் அன்றே திரு.கார்த்திகேயன், உதவி பொறியாளர்/R.S. மாத்தூர் அவர்களிடம் பெயர் மாற்றத்திற்கான விண்ணப்பம், படிவம்–4, பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம், மணக்குடையான் ஊராட்சி வழங்கிய 03.04.2021 நாளிட்ட வீட்டு வரி ரசீது மற்றும் கூடுதல் மாவட்ட நீதிமன்றம், அரியலூர்– தீப்பாணை நகல் ஆகியவற்றை சமர்ப்பிக்கப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 மின்வாரிய விதியின்படி, பெயர் மாற்றத்திற்கான கால கெடு 7 நாள் எனவும், விண்ணப்பம் செய்து 21 நாட்கள் ஆகியும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால் மேல்முறையீட்டாளர் குறைதீர்மன்ற விசாரணைக்காக 25.08.2021 ஆம் தேதியன்று இணையதளம் மூலம் மனு தாக்கல் செய்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 மேல் குறிப்பிடப்பட்ட மனுவை குறைதீர் மன்றத்திற்கு தாக்கல் செய்யப்பட்ட மறு நாளே இரண்டு பெயர் மாற்றத்திற்கான விண்ணப்பங்களையும், திரு. கார்த்திகேயன்,

உதவி பொறியாளர் R.S. மாத்தூர் அவர்கள் நிராகரித்துள்ளதாகவும், ஆன்லைன் மூலம் நிராகரிப்புக்கான காரணத்தை பாக்கும் பொழுது **Survey No.323/41 is incorrect in VAO Certificate** என குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், நிராகரிப்புக்கான காரணத்தை கூர்ந்து கவனிக்கும் பொழுது மேல்முறையீட்டாளர் கிரயப்பத்திரம், வீட்டு வரி ரசீது, நீதிமன்ற தீர்பாணை ஆகியவை மட்டுமே இணைத்திருக்கும் வேலையில் இணைக்கப்படாத கிராம நிர்வாக அலுவலரின் சான்றில் புல எண்.323/41 என்று தவறாக உள்ளது என குறிப்பிடப்பட்டு நிராகரித்திருப்பது மிகுந்த ஏமாற்றம் மட்டும் அல்லாமல் தவறான காரணத்தினால் நிராகரிக்கப்பட்டதாகும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 புல எண் பற்றிய சந்தேகங்கள் எழுந்திருந்தாலோ அல்லது தவறு என்று கருதியிருந்தாலோ, அதனை பொருத்து சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலரிடம் கடிதம் மூலம் கேட்டு அறிந்திருக்கலாம் எனவும், பெயர் மாற்றத்திற்கான போதிய உரிமை ஆவணம் உள்ளதால் கிராம நிர்வாக அலுவலரின் சான்று எதையும் சமர்பிக்கப்படவில்லை எனவும், மேலும் மின் பெயர் மாற்றம் விதி தொகுப்பு விதியின் படி, சொத்தின் கிரயப்பத்திரம் அல்லது வீட்டு வரி ரசீது ஏதேனும் ஒன்று போதுமானது எனவும், ஆகையால் போதிய ஆதாரங்கள் இல்லாமல் தவறாக திரு. கார்த்திகேயன், உதவி பொறியாளர், R.S. மாத்தூர் அவர்கள் பெயர் மாற்ற விண்ணப்பங்களை நிராகரித்துள்ளார் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.9 பெயர் மாற்ற விண்ணப்பம் அதற்குரிய வீட்டின் உரிமை ஆவணம் மற்றும் கட்டணம் ஆகியவை ஆன்லைன் மூலம் சமர்பிக்கப்பட்டவுடன் அன்றே பெயர் மாற்றம் செய்து அதற்குரிய அத்தாட்சியை நுகர்வோரிடம் கொடுக்கப்பட வேண்டும் என (Per) (CMD) TANGEDCO Proceedings No.25 dated 03.02.2021–இல் குறிப்பிட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.10 மேலும் நுகர்வோரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை 3 நாட்களுக்குள் சரிபார்த்து அதில் ஏதேனும் குறையிருப்பின் அதனை ஆன்லைனில் பதிவேற்றம் செய்வது மட்டும் அல்லாமல் எழுத்தின் வடிவமாக நுகர்வோரிடம் தெரியப்படுத்தப்பட வேண்டும் எனவும், அதன் பிறகு 7 நாட்களுக்குள் சரியான வீட்டின் உரிமை ஆவணங்களை சமர்ப்பிக்கப்படவில்லையெனில் பெயர் மாற்றம் செய்ததை ரத்து செய்து அதற்கு முன் இருந்த பெயருக்கே மின் இணைப்பு வழங்கப்பட்டு அதனையும் பெயர்

மாற்றம் விண்ணப்பித்தவருக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.11 உரிமை ஆவணமாக கிரயப்பத்திரம் மற்றும் வீட்டு வரி ரசீது சமர்ப்பித்தும், அன்றே இரண்டு மின் இணைப்பு பெயர் மாற்றத்திற்கான கட்டணமாக ரூ.708/- செலுத்தியும், மேற்கூறிய விதிகள் படி சமர்ப்பித்த நாள் அன்றே பெயர் மாற்றம் செய்யப்படவில்லை எனவும், அத்தாட்சியாக எவ்வித ரசீதும் தரப்படவில்லை எனவும், சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தில் குறையிருப்பின் அதனை நிராகரிப்பதற்கு முன் அதனை பற்றிய காரணங்களை ஆன்லைன் மூலமாகவும், கடிதம் மூலமாகவும் தெரியப்படுத்தப்படவில்லை எனவும், பெயர் மாற்றத்திற்கான காலவரம்பான ஏழு நாட்களுக்குள் பெயர் மாற்றமோ அல்லது நிராகரிப்போ அல்லது அறிவிப்போ, எதனையும் செய்யவில்லை எனவும், எல்லாவற்றுக்கும் மேலாக கிரையப்பத்திரம் இருந்தும் வீட்டு வரி ரசீது கட்டாயம் என்று திரு.கார்த்திகேயன், உதவி பொறியாளர் R.S. மாத்தூர் அவர்களின் வற்புறுத்தலின் பெயரிலேயே 03.08.2021 நாளிட்ட வீட்டு வரி ரசீது சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.12 ஆக மொத்தத்தில் மேற்படி விதிகளில் அறிவுறுத்தப்பட்ட எதனையும் திரு. கார்த்திகேயன், உதவி பொறியாளர்/R.S. மாத்தூர் அவர்களால் பின்பற்றப்படவில்லை எனவும், அதன் விளைவாகவே பெயர் மாற்ற விண்ணப்பங்கள் சரியான காரணமின்றி நிராகரிக்கப்பட்டு அதன் வாயிலாக குறைதீர்ப்பாளர் வரை முறையீடு செய்வதற்கான சூழல் ஏற்பட்டுவிட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.13 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற ஆணையில் புல எண் என்னவென்று குறிப்பிடவில்லை எனவும், அதேபோல், கதவிலக்கம் என்னவென்று குறிப்பிடப்படவில்லை எனவும், எந்த ஆவணத்தை எதோடு ஒப்பிடும் பொழுது எவை வெவ்வேறாக / முரண்பாடாக இருந்தது எனவும், எந்த புலன் எண் மற்றும் கதவிலக்கம் எண் சரி என்றோ அல்லது தவறு என்றோ கூற முன் வருகிறார்கள் என்பதையும் தெளிவாக எடுத்துரைக்கப்படவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.14 பொய் சாட்சியாகும், கிராம நிர்வாக அலுவலரின் சான்று இணைக்கப்படவில்லை, அதற்கு சாட்சியாக மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த CGRF மனுவில் கிராம நிர்வாக அலுவலர் சான்று இணைத்திருப்பதாக குறிப்பிடவில்லை, கிராம நிர்வாக அலுவலர்

சான்று ஆன்லைனில் பதிவேற்றம் செய்யப்படவில்லை மற்றும் கிராம நிர்வாக அலுவலரின் உண்மை சான்று கைவசமில்லை, ஆனால் இணைத்திருப்பது போலவும், அதில் தவறு இருப்பது போலவும் வாரிய தரப்பு சாட்சி அளித்திருப்பது உண்மைக்கு புறம்பான ஆதாரமற்ற சாட்சியாகும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.15 கிரையப்பத்திரம் மற்றும் வீட்டு வரி ரசீது ஆகியவை இணைக்கப்பட்டிருக்கும் வேளையில் உரிய ஆவணம் இணைக்கப்படாதது போலவும், மேற்படி ஆவணங்கள் பெயர் மாற்றத்திற்கான வாரிய விதிமுறைக்கு உட்படாதது போலவும், இணைக்கப்பட்டிருக்கும் ஆவணங்கள் மற்றும் மின் வாரிய பெயர் மாற்ற விதியில் கூறப்பட்டிருக்கும் உரிமை ஆவணம் ஆகியவற்றை சரிவர ஆராயாமலும், நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களை கருத்தில் கொள்ளாமலும் மற்றும் பொய் சாட்சிகளை கருத்தில் கொண்டும் தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பது ஏற்புடையது அல்ல. முடிவாக, வீட்டு வரி ரசீது, கிரையப்பத்திரம் இணைக்கப்பட்டு இருப்பதாக மின் வாரிய தரப்பில் சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது, இதில் குறை ஒன்றும் இல்லை. ஆகையால் மின் இணைப்பு பெயர் மாற்ற விதியின்படி, போதுமான உரிமை ஆவணம் இருந்தும் அதனை ஏற்று செயலாற்ற மறுப்பது தவறாகவே கருத வேண்டியிருக்கிறது என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.16 03.02.2021 நாளிட்ட பெயர் மாற்றத்திற்கான விதிமுறைகளை கூர்ந்து நோக்கும் பொழுது, மின்வாரிய விதிகளுக்குட்பட்டு ஏதேனும் ஒரு உரிமை ஆவணம் பெற்றால் போதுமானது எனவும், ஒன்றுக்கு மேற்பட்ட ஆவணங்கள் கேட்டு நுகர்வோரை கட்டாயப்படுத்த வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும், இரண்டாவதாக 24.11.2020 நாளிட்ட பெயர் மாற்ற விதிமுறைகளை கூர்ந்து படிக்கும் பொழுது, பெயர் மாற்றத்திற்காக அதிகப்படியான ஆவணங்களை கேட்டு நுகர்வோரை கட்டாயப்படுத்த வேண்டாம் எனவும், மின்வாரிய விதி 5(7) –ன் படி ஆவணங்களை பெற்று பெயர் மாற்றம் செய்யும் படியும் அறிவுறுத்தியுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.17 மின்வாரிய பெயர் மாற்ற விதியின்படி, கிரைய பத்திரம், வீட்டு வரி ரசீது மற்றும் நீதிமன்ற தீர்ப்புரை இணைக்கப்பட்டிருக்கும் வேலையில் இவற்றில் ஏதேனும் ஒன்று போதுமானதாகும். ஆனால் அதிகப்படியான ஆவணங்களை (வருவாய் ஆவணங்கள்) கேட்டு கட்டாயப்படுத்துவதும், தீர்ப்பு வழங்குவதும் மின்வாரிய விதி மற்றும் மேற்படியான

சுற்று அறிக்கைக்கு எதிரானதாகவும், விதி மீறல் ஆகவும் அமைந்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.18 மின் வழங்கல் செயல்திறன் செந்திரங்கள் (Standard of Performance Regulation) விதிமுறைகள் 8–இன் படி பெயர் மாற்ற விண்ணப்பம் பெறப்பட்ட 7 நாட்களுக்குள் பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டும் தவறினால் விதிமுறை பிரிவு 21(1) (e) படி நாள் ஒன்றுக்கு ரூ.100 இழப்பீடு வீதம் அதிகபட்சம் ரூ.1,000/– இழப்பீடு வழங்கப்பட வேண்டும் எனவும், இதன்படி 03.08.2021 தேதியன்று ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்யப்பட்டு 21 நாட்கள் முடிந்த பிறகு தவறான காரணத்தினால் இரண்டு விண்ணப்பங்களும் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும், ஆகவே இரண்டு விண்ணப்பங்களுக்கான இழப்பீடு வழங்கக்கோரி மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

5.19 மின்வாரிய விதிகளுக்கு உட்பட்டு போதிய ஆவணங்களை சமர்ப்பித்திருக்கும் வேலையில் பெயர் மாற்ற விண்ணப்பங்களை நிசராகரித்திருப்பதால், மேல் முறையீட்டாளர் மிகுந்த மன உளைச்சலும், வேதனையும் அடைந்துள்ளதாகவும், ஆகையால் மேல்முறையீட்டாளர் கிரையம் பெற்ற வீட்டில் அமைந்துள்ள மேற்படியான இரண்டு மின் இணைப்புகளையும் பெயர் மாற்றம் செய்ய ஆணை பிறப்பிக்குமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 மின் இணைப்பு எண் 322–003–633–ஐ திரு. பாலசுப்ரமணியன் பெயரிலிருந்து திருமதி. சந்திரா பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய 03.08.2021 அன்று விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டு இத்துடன் கதவிலக்கம் 5/64B என குறிப்பிடப்பட்டு 2018–2022 வரையுள்ள காலத்திற்கு திருமதி.சந்திரா பெயரில் விதிக்கப்பட்ட வீட்டு இரசீது, புல எண்: 343/21, கதவிலக்கம் 5/64 B எனவும் குறிப்பிடப்பட்டு, நான்கு எல்லை விவரங்களுடன் தெளிவான நாள் குறிப்பிடப்படாத கிராம நிர்வாக அலுவலரின் சான்று ஆகியவற்றை பதிவேற்றம் செய்து மேற்படி இவ்வாவணங்கள் அலுவலகத்தில் அளிக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மற்றொரு மின் இணைப்பு எண்:322–003–043–ஐ திருமதி.தைலம்மை ஆச்சி பெயரிலிருந்து திருமதி. சந்திரா பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய 03.08.2021 அன்று

விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டு இத்துடன் கதவிலக்கம் 5/64B என குறிப்பிடப்பட்டு 2018–2022 வரையுள்ள காலத்திற்கு திருமதி சந்திரா பெயரில் விதிக்கப்பட்ட வீட்டு இரசீது, புல எண். 343/21, காவிலக்கம் 5/64B எனவும் குறிப்பிடப்பட்ட, நான்கு எல்லை விபரங்களுடன் தெளிவான நாள் குறிப்பிடப்படாத கிராம நிர்வாக அலுவலரின் சான்று ஆகியவற்றை பதிவேற்றம் செய்து மேற்படி இவ்வாவணங்கள் அலுவலகத்தில் அளிக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 பெயர்மாற்றம் கோரும் இணைப்புகள் உள்ள வீட்டின் புல எண் 341/21 எனவும், வீட்டின் கதவிலக்கம் 2/64 எனவும் பத்திர பதிவில் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் மின் இணைப்பு எண் 322–003–633–ஐ பெயர் மாற்றம் செய்ய கோரிய விண்ணப்பத்தில் இணைக்கப்பட்ட ஆவணங்களில் புல எண் 343/21 கதவிலக்கம் 5/64B எனவும் குறிப்பிட்டு விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 ஆகவே பத்திரப்பதிவில் உள்ள இரண்டு புல எண்கள், கதவிலக்கம் மற்றும் நான்கு எல்லை விபரங்களுக்கும் மற்றும் பெயர் மாற்றம் பெற அளிக்கப்பட்ட கிராம நிர்வாக அலுவலரின் உரிமைச் சான்றிதழில் உள்ள நான்கு எல்லை விபரங்களுக்கும் மாறுபாடு உள்ளது மற்றும் பெயர் மாற்றம் கோரும் மின் இணைப்புகள் விபரமும் பதிவு பத்திரத்தில் குறிப்பிடப்படவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மேற்படி வீட்டின் மூன்று மின் இணைப்புகள் உள்ள நிலையில் பத்திர பதிவின்படி ஒவ்வொரு மின்னிணைப்பிற்குறிய வீட்டின் வரைபடம், வீடு அமைந்துள்ள புல எண், தொடர்புடைய கதவிலக்கம் குறிப்பிடப்பட்ட கிராம நிர்வாக அலுவலரின் நடப்பு உரிமை சான்று, திருமதி. சந்திரா பெயரில் விதிக்கப்பட்ட சரியான கதவிலக்கம் குறிப்பிடப்பட்ட நடப்பு வீட்டு வாய்தா இரசீது மற்றும் உறுதிமொழி சான்றுடன் விண்ணப்பம் செய்யும் பட்சத்தில் ஆய்வுகள் செய்யப்பட்டு வாரிய விதிமுறையின் கீழ் விண்ணப்பதாரர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்படும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் திருமதி. P.சந்திரா அவர்கள் திரு ராஜகோபால் என்பவரிடமிருந்து 27.01.2016–இல் சொத்தை (வீடு) கிரையம் பெற்று மின் இணைப்பு எண் 322–003–043 மற்றும் 322–003–633 ஆகியவற்றை பெயர் மாற்றம் கோரி விண்ணப்பம், படிவம்–4, பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம், ஊராட்சி வழங்கிய வீட்டு வரி ரசீது அரியலூர் கூடுதல் மாவட்ட நீதிமன்ற தீர்ப்பாணை நகல் ஆகியவற்றுடன் 03.08.2021 அன்று சமர்ப்பித்ததாகவும், 21 நாட்கள் ஆகியும் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் மின்குறைதீர்க்கும் மன்றத்தில் மனு சமர்ப்பித்து கிடைக்கப்பெற்ற ஆணையில் திருப்தியில்லாததால் மேல்முறையீடு செய்துள்ளதாக தெரிவித்துள்ளார். மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்ய சொத்தின் கிரையப்பத்திரம் அல்லது வீட்டு வரி ரசீது ஏதேனும் ஒன்று போதுமானது எனவும், ஆனால் எதிர்மனுதாரர் தனது பெயர் மாற்ற விண்ணப்பத்தை நிராகரித்துள்ளார் எனவும், தான் சமர்ப்பிக்காத கிராம நிர்வாக சான்றில் புல எண் 323/41 என தவறாக உள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளதாக மேல்முறையீட்டளர் தெரிவித்துள்ளார். மேலும் தான் சமர்ப்பித்த பெயர் மாற்ற விண்ணபத்திற்கு ஒப்புகை ரசீது தரப்படவில்லையெனவும், சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தில் உள்ள குறைபாடுகளை தனக்கு தெரியப்படுத்தவில்லையெனவும் மேல்முறையீட்டளர் தெரிவித்துள்ளார். மேலும் மின்வழுங்கல் செயல்திறன் செந்திரங்கள் (Standard of Performance Regulation) விதிமுறைகள் 8–இன்படி விண்ணப்பம் பெறப்பட்ட 7 நாட்களுக்குள் பெயர் மாற்றம் செய்ய வேண்டுமெனவும், தவறினால் விதிமுறை பிரிவு 21(1)(e)–இன்படி நாள் ஒன்றுக்கு ரூ.100 வீதம் அதிகபட்சமாக ரூ.1,000/– இழப்பீடு வழங்க வேண்டுமெனவும், 03.08.2021–இல் சமர்ப்பிக்கப்ட்ட விண்ணப்பம் 21 நாட்கள் முடிந்த பிறகு தவறான காரணத்தை கூறி இரண்டு விண்ணப்பங்களும் நிராகரிக்கப்பட்டுள்ளதால் இரண்டு விண்ணப்பங்களுக்கான இழப்பீடு வழங்க மேல்முறையீட்டளார் கோரியுள்ளார்.

7.3 மின் இணைப்பு எண் 322–003–633–ஐ திரு பாலசுப்ரமணியன் பெயரிலிருந்து தன் பெயருக்கும், மின் இணைப்பு எண் 322–003–43–ஐ திருமதி தைலம்மை ஆச்சி பெயரிலிருந்து தன் பெயருக்கும் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பத்துடன் கதவிலக்கம் 5/64 B, புல எண் 343/21 என குறிப்பிடப்பட்ட மேல்முறையீட்டாளர் திருமதி சந்திரா பெயரில் விதிக்கப்பட்ட வீட்டு வரி ரசீது மற்றும் நாள் குறிப்பிடாத கிராம நிர்வாக அலுவலரின் சான்று ஆகியவற்றை சமர்ப்பித்துள்ளதாகவும், சமர்ப்பிக்கப்பட்ட

பத்திர பதிவு ஆவணத்தில் புல எண் 341/21 எனவும் கதவிலக்க எண் 2/64 எனவும் உள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். மேலும் கிரையப் பத்திரத்தில் பெயர் மாற்றம் கோரும் மின் இணைப்புகள் விபரமும் குறிப்பிடப்படவில்லையென எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். மேற்படி வீட்டில் மூன்று மின் இணைப்புகள் உள்ள நிலையில் பத்திரப்பதிவின்படி ஒவ்வொரு மின் இணைப்புக்குரிய வீட்டின் வரைபடம், வீடு அமைந்துள்ள புல எண், தொடர்புடைய கதவிலக்க எண் குறிப்பிடப்பட்ட கிராம நிர்வாக அலுவலரின் நடப்பு உரிமைச் சான்று, மேல்முறையீட்டாளர் திருமதி சந்திரா பெயரில் விதிக்கப்பட்ட சரியான கதவிலக்கம் குறிப்பிடப்பட்ட நடப்பு வீட்டு வரி ரசீது மற்றும் உறுதிமொழி சான்றுடன் விண்ணப்பம் சமர்ப்பிக்கும் பட்சத்தில் விதிமுறையின்படி பெயர் மாற்றம் செய்யப்படுமென எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.4 மின் இணைப்புகள் 322–003–633 மற்றும் 322–003–43 ஆகியவற்றை பெயர் மாற்றம் செய்ய மேல்முறையீட்டளர் கோரியுள்ளார். இது சம்பந்தமாக தமிழ்நாடு மின்சார மின் வழங்கல் விதித்தொகுப்பு விதி 5(7) கீழெ கொடுக்கப்பட்டுள்ளது.

*"5: **பல்வகைக் கட்டணங்கள்**:*

*(1) xxxxx*

*(2) xxxxx*

*(3) xxxxx*

*(4) xxxxx*

*(5) xxxxx*

*(6) xxxxx*

*(7) **பெயர் மாற்றக் கட்டணம்**:*

*(i) நுகர்வோர் இறந்த காரணத்திற்காகத் தரப்படும் ஒவ்வொரு விண்ணப்பமும் இந்த விதி தொகுப்பின் பிற்சேர்க்கையில் படிவம் (1) இல் பின் வருவனவற்றை உடனிணைத்து தரப்பட வேண்டும்.*

*(a) உரிய வட்டாட்சியரிடமிருந்தான வாரிசுச் சான்றிதழ் அல்லது உள்ளாட்சி அமைப்பின் வரிகட்டிய பற்றுச் சீட்டு போன்ற உரிமையை நிலை நாட்டும் சான்றுமெய்ப்பு (Proof).*

*(b) சட்டப்படியான வாரிசுகளின் மறுப்பின்மைச் சான்றிதழ், அப்படி யாராவது இருந்தால் அல்லது ரூ.80 மதிப்புடைய நீதித்துறை சாரா (Non Judicial) முத்திரைத்தாளில் இவ்விதித்தொகுப்பின் பின்னிணைப்பில் உள்ள படிவம் (3) இலான காப்புறுதிப்பத்திரத்துடன் செல்வாக்குள்ள பொது மனித (Notary Public) ரின் அல்லது அரசிதழ் பதிவுற்ற அலுவலரின் அதிகாரச் சான்றின் பேரிலான சூளேற்பு உறுதிமொழிப்பத்திரம் (Affidavit).*

*(c) ஆணையத்தால் குறிப்பிடப்பட்ட கட்டணத்துடன் புது விண்ணப்பமும் சம்மதிப்புப் படிவமும்*

*(ii) பெயர் மாற்றத்துக்கான ஒவ்வொரு விண்ணப்பமும் பிற நிகழ்வுகளில், இந்த விதித்தொகுப்பின் பின்னிணைப்பில் உள்ள படிவம் (1) மற்றும் (2) இல் பின்வருவனவற்றுடன் இணைத்துத் தரப்பட வேண்டும்.*

*(a) இந்த விதித்தொகுப்பின் பின்னிணைப்பில் உள்ள படிவம் (4) இல் உள்ள உறுதியேற்புடன் பெயர் மாற்றத்துக்கான அடிப்படை ஆவணம்.*

*(b) காப்புவைப்புத் தொகையை மாற்றுவதற்கான நுகர்வோரின் சம்மதக் கடிதம். அத்தகைய சம்மதக் கடிதம் தரமுடியாவிட்டால் புதிதாகக் காப்புவைப்புத்தொகை கட்ட வேண்டும்.*

*(c) ஆணையத்தால் குறிப்பிடப்பட்ட கட்டணத்துடன் புது விண்ணப்பமும், இசைவுப் படிவமும்.*

***விளக்கம்**: துண்டிப்பில் இல்லாத மின்னிணைப்புகளுக்கு மட்டுமே பெயர் மாற்றம் வழங்கப்படும்".*

மேற்கண்ட விதியின்படி மின் நுகர்வோர் இறந்த காரணத்திற்காக அல்லாமல் பிற நிகழ்வுகளில் பெயர் மாற்றத்துக்கான ஒவ்வொரு விண்ணப்பமும் விதித் தொகுப்பின் பின்னிணைப்பில் உள்ள படிவம் (1) மற்றும் (2) ஆகியவற்றை இணைத்து படிவம் (4)–இல் உள்ள உறுதியேற்புடன் பெயர் மாற்றத்துக்கான அடிப்படை ஆவணத்துடன் சமர்ப்பிக்க வேண்டுமென அறிய முடிகிறது. காப்பு வைப்புத் தொகையை மாற்றுவதற்கான நுகர்வோரின் சம்மதக் கடிதம் சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய சம்மதக் கடிதம் தரமுடியாவிட்டால் புதிதாகக் காப்பு வைப்புத் தொகை கட்ட வேண்டுமெனவும், ஆணையத்தால் குறிப்பிடப்பட்ட கட்டணத்துடன் புது விண்ணப்பமும், இசைவுப் படிவமும் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென அறியமுடிகிறது. மேலும் துண்டிப்பில் இல்லாத மின் இணைப்புகளுக்கு மட்டுமே பெயர் மாற்றம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7.5 இந்த வழக்கைப் பொறுத்தமட்டில் மேல்முறையீட்டாளர் வீட்டை திரு ராஜகோபால் என்பவரிடமிருந்து விலைக்கு வாங்கியுள்ளார். மேற்படி சொத்தின் கிரையப்பத்திரம் மற்றும் வீட்டிவரி ரசீது ஆகியவற்றை மின் இணைப்புகளை (SC No. 633 & 43) பெயர் மாற்றம் செய்ய சமர்ப்பித்துள்ளார். மேற்கண்ட மின் இணைப்புகள் திரு பாலசுப்ரமணியன் பெயரிலும் திருமதி தைலம்மை ஆச்சி பெயரிலும் பதிவாகியுள்ளது. திரு ராஜகோபாலிடமிருந்து கிரையம் பெற்ற (வீடு) சொத்தின் கிரையப்பத்திரத்தில் புல எண் 341/21 எனவும், கதவிலக்கம் எண் 2/64 எனவும், மின் இணைப்பு எண் 70 எனவும் பதிவு செய்யப்பட்டுள்ளது. வீட்டு வரி ரசீதில் கதவிலக்கம் எண் 5/64B என பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மின் இணைப்பு எண் 70 திரு

ராஜகோபால் பெயரிலிருந்து மேல்முறையீட்டாளர் பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது அறிய முடிகிறது.

7.6 இதே சொத்து கிரையப் பத்திரம் மின் இணைப்புகள் 633 மற்றும் 43–ஐ பெயர் மாற்றம் செய்ய சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்கண்ட மின் இணைப்புகள் புல எண் 341/21–இல் உள்ள வீட்டில் உள்ளதாக கிரையப் பத்திரத்தில் பதிவு செய்யப்படவில்லை. மேலும் சொத்து கிரையப் பத்திரத்தில் கதவிலக்க எண் 2/64 எனவும் வீட்டு வரி ரசீதில் 5/64B எனவும் மாறுபட்டு பதிவாகியுள்ளது. மேலும் சொத்து கிரையப் பத்திரத்தில் புல எண் 341/21, கதவிலக்க எண் 2/64 மற்றும் மின் இணைப்பு எண் 70 என தெளிவாக குறிப்பிட்டு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் மின் இணைப்பு எண்கள் 633 மற்றும் 43 ஆகியவை கிரையப்பத்திரத்தில் குறிப்பிட்டு பதிவு செய்யப்படவில்லையெனவும், மேற்படி மின் இணைப்புகளின் கதவிலக்கமும் பதிவு செய்யப்படவில்லையெனவும் அறியமுடிகிறது. தமிழ்நாடு மின் வழங்கல் விதி 5 இன் பிரிவு (7)(ii)–இல் பெயர் மாற்றத்திற்கான அடிப்படை ஆவணம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென அறிய முடிகிறது. அதாவது பெயர் மாற்றம் தேவையின் காரணமே சொத்து விலைக்கு வாங்கப்பட்டது என்பதால், கிரையப் பத்திரமே பெயர் மாற்றத்திற்கான அடிப்படை ஆவணமாகும். எனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மேற்கண்ட மின் இணைப்புகளை பெயர் மாற்றம் செய்ய இயலாது என்கிற எதிர்மனுதாரரின் வாதம் ஏற்புடையதாக கருதுகிறேன். ஆகையால் மின் இணைப்புகள் 633 மற்றும் 43 ஆகியவற்றை தனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்வதற்கு மேல்முறையீட்டாளர் தமிழ்நாடு மின்வழங்கல் விதி 5(7)(ii)–ற்கு இணங்க உரிய வருவாய் ஆவணங்கள் சமர்ப்பிக்கும் நேர்வில் பெயர் மாற்றம் செய்வதற்கு எதிர்மனுமதரர் நடவடிக்கை மேற்கொள்ளலாம் என தீர்வு செய்கிறேன்.

7.7 மின் இணைப்புகளை 7 நாட்களுக்குள் பெயர் மாற்றம் செய்யப்படாத காரணத்தால் தமிழ்நாடு மின்சார செயல்திறச் செந்திரங்கள் விதி 21(1)(e)–இன்படி அதிகபட்ச இழப்பீடு தரப்பட வேண்டுமென மேல்முறையீட்டாளர் கோரியுள்ளார். பத்தி 7.6–இல் உள்ள தீர்வின்படி மேல்முறையீட்டாளர் பெயர் மாற்றம் கோரிய விண்ணபத்துடன் தமிழ்நாடு மின்வழங்கல் விதி 5(7)(ii)–ற்கு இணங்க உரிய வருவாய்

ஆவணங்கள் சமர்ப்பிக்காததால் மேல்முறையீட்டாளரின் இழப்பீடு கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

**8.0 முடிவுரை:**

8.1 பத்தி 7.0–இல் உள்ள தீர்வின்படி

(i) மின் இணைப்பு எண் 322–003–633 மற்றும் 322–003–43 ஆகியவற்றை தனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்வதற்கு மேல்முறையீட்டாளர் தமிழ்நாடு மின்வழங்கல் விதி 5(7)(ii)–ற்கு இணங்க உரிய வருவாய் ஆவணங்கள் சமர்ப்பிக்கும் நேர்வில் பெயர் மாற்றம் செய்வதற்கு எதிர்மனுமதரர் நடவடிக்கை மேற்கொள்ளலாம் என தீர்வு செய்கிறேன்.

(ii) பத்தி 7.7–இல் உள்ள தீர்வின்படி மேல்முறையீட்டாளர் பெயர் மாற்றம் கோரிய விண்ணபத்துடன் தமிழ்நாடு மின்வழங்கல் விதி 5(7)(ii)–ற்கு இணங்க உரிய வருவாய் ஆவணங்கள் சமர்ப்பிக்காததால் மேல்முறையீட்டாளரின் இழப்பீடு கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 94/2021 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

**(செ. தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

''நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை''
**"No Consumer, No Utility"**

பெறுநர்:

1. திருமதி ப.சந்திரா,
31, காமராஜர் தெரு, பெண்ணாடம்,
திட்டக்குடி தாலுக்கா,
கடலூர் மாவட்டம் – 606 105.

2. செயற்பொறியாளர்/இ.கா./அரியலூர்,
பெரம்பலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண் 56, ராஜாஜி நகர், கல்லூரி ரோடு,
அரியலூர் – 621 713.

3. உதவி செயற்பொறியாளர்/ இ.கா./கிராமியம்/செந்துறை,
பெரம்பலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
33/11KV துணை மின் வளாகம்,
செந்துறை அஞ்சல் & தாலுக்கா,
செந்துறை – 621 714.

4. உதவி பொறியாளர்/ மாத்தூர்,
பெரம்பலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
4/14 & 4/12, மெயின் ரோடு, அசவீரன் குடுக்காடு,
R.S. மாத்தூர் – 621 714.

5. மேற்பார்வை பொறியாளர், – By email
பெரம்பலூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண் 230 KV ஆட்டோ துணை வளாகம் பெரம்பலூர்,
நான்கு ரோடு அருகில், பெரம்பலூர் – 621 220.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 4வது தளம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.